வணிகக்கல்வி

காப்புறுதிக் கோட்பாடுகள்



e தக்ஷலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 8.2 : காப்புறுதியின் நடைமுறை ரீதியான பயன்பாட்டிற்கு துணையாக அமையும் காப்புறுதித் தத்துவங்களை தேடியறிவார்.

காப்புறுதி செய்யும் உரிமை

சொத்தொன்றை நல்ல நிலையில் பேணும்போது அதன்மூலம் பொருளாதார ரீதியான நன்மைகளையும் அது அழிவடையுமாயின் பொருளாதார ரீதியான நட்டத்தையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையினையே காப்புறுதி செய்யும் உரிமை என்கிறோம்.

உதாரணம்:-

- கணவரின் உயிர் தொடர்பில் மனைவிக்கும் மனைவியின் உயிர் தொடர்பில் கணவனுக்கும் காப்புறுதி செய்யும் உரிமை காணப்படல்.
- சொத்தொன்றின் சட்டரீதியான உரிமையாளருக்கு அந்தச் சொத்திற்கு காப்புறுதி செய்யும் உரிமை உண்டு.
- கடன் கொடுத்தோருக்கு கடன்பட்டோரின் ஆயுளை தனது கடனின் அளவிற்கு காப்புறுதி செய்யும் உரிமை உண்டு.

உச்ச நம்பிக்கைத் தத்துவம்

காப்புறுதி ஒப்பந்தத்தை செய்பவரும் காப்புறுதியை ஏற்கும் நிறுவனமும் ஒப்பந்தம் தொடர்பில் சகல விடயங்களையும் பரஸ்பரம் மறைக்காது வெளிப்படுத்தவேண்டும் என்பதாகும்

உதாரணம்:-

- வாணி என்பவர் தனக்கு இருந்த இருதய நோயை மறைத்து ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் வாணி இறக்கும் போது காப்புறுதி மறுக்கப்படல்

இழப்பீட்டுத் தத்துவம்

சொத்தொன்று இழப்பிற்குள்ளாகும் போது சொத்து சேதத்திற்கு முன்பு இருந்த நிலைக்கு கொண்டுவருவதற்கு ஏற்படும் செலவு மாத்திரம் இழப்பீடாக வழங்கப்படும்

உதாரணம்:-

- 50 இலட்சம் பெறுமதியான வான் ஒன்று அதே தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நிலையில் விபத்து ஒன்றின் போது 5 இலட்சம் சேதம் ஏற்படுமாயின் இழப்பீடாக 5 இலட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்படும்

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பதிலாள் வைப்புத் தத்துவம்

காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றிற்கு ஏற்பட்ட இழப்பிற்கான தொகையினை காப்புறுதி நிறுவனம் வழங்கிய பின்னர் குறித்த சொத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் அனைத்திற்கும் காப்புறுதி நிறுவனமே உரிமையாளர் என்பதாகும்.

உதாரணம்:-

30 இலட்சத்துக்கு காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று திடீர் விபத்தொன்றினால் முழுமையாக அழிவுற்றதாயின் காப்புறுதி நிறுவனம் இழப்பீடாக 30 இலட்சம் வழங்கிய பின் வாகனத்தின் எஞ்சிய கழிவுப் பெறுமதியை நிறுவனம் தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளும்.

பங்களிப்புத் தத்துவம்

சொத்தொன்று ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும்போது அச்சொத்துக்கு சேதம் ஏற்படின் இழப்பீட்டுத் தொகையினை சகல காப்புறுதி நிறுவனங்களும் ஒப்பந்தத்தின் விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்ந்து வழங்கும் தத்துவம்

உதாரணம்:-

20 இலட்சம் பெறுமதியான சொத்து A,B,C ஆகிய காப்புறுதி நிறுவனங்களில் முறையே 10 இலட்சம், 6 இலட்சம், 4 இலட்சம் எனக் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த சொத்துக்கான நட்டம் 2 இலட்சம் ஏற்படுமாயின் 5:3:2 என்ற விகிதாசாரத்தில் A கம்பனி 1 இலட்சம் ரூபாவும் B கம்பனி 60000 ரூபாவும் C கம்பனி 40000 ரூபாவும் இழப்பீட்டினை பகிர்ந்து வழங்கும்



இழப்பீட்டுத் தத்துவத்தின் துணைத் தத்துவங்களே.....

- பதிலாள் வைப்புத் தத்துவம்
- பங்களிப்புத் தத்துவம்

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அண்மிய காரணிகள்

காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றிற்கு அல்லது ஆயுளுக்கு சேதம் ஏற்படும்போது அச்சேதம் ஏற்பட்டதில் பல காரணிகள் செல்வாக்கு செலுத்தியிருப்பின் சேதம் ஏற்பட்டதிற்கான மிக நெருங்கிய காரணி ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தால் மாத்திரம் இழப்பீடு வழங்கப்படும் என்பதாகும்.

உதாரணம்:- களவபாயக் காப்புறுதி ஒப்பந்தமொன்றை செய்துள்ள ஒருவரின் வீடு தீயினால் சேதத்திற்குள்ளாகும் போது அதற்கான இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியாது காரணம் சேதம் ஏற்படுவதில் தாக்கம் செலுத்திய நிகழ்வாகிய தீயானது களவபாயக் காப்புறுதியில் உள்ளடக்கப்படவில்லை என்பதாகும்.



Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மறுகாப்புறுதி

காப்புறுதிக் கம்பனியொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடரொன்றை அக் காப்புறுதி நிறுவனமானது வேறு ஒரு காப்புறுதி நிறுவனத்தில் அல்லது பல காப்புறுதி நிறுவனங்களில் அச்சொத்தினை மீண்டும் காப்புறுதி செய்தல் மறுகாப்புறுதி எனப்படும்.



ஒப்புறுதி

பாரிய பெறுமதி கொண்ட சொத்துக்கள் தொடர்பில் காணப்படும் நட்டத்தின் அளவினை பகுதிகளாக பிரித்து காப்புறுதிக் கம்பனிகள் சிலவற்றிற்கு ஒப்படைத்தலும் விபத்து காரணமாக சொத்து சேதமடையின் ஒவ்வொரு கம்பனிகளும் தாம் ஏற்றுக்கொண்ட அளவிற்கு நட்ட இடரினை செலுத்துதல் ஒப்புறுதி எனப்படும்.

சொத்து ஒன்றின் இடரினை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்யப்படுதல் இரட்டைக் காப்புறுதி எனப்படும்





Copyright © e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk